செ. கு. எண்:108 நாள்: 02.08.2017

# பொதுவிநியோகத் திட்டம் பற்றி எதிர்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்களின் அறிக்கை

தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை அதன் தன்மை மாறாமல் செயல்படுத்துவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக உள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் –2013 அமல்படுத்தப்பட்ட பின்னரும் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் தமிழக அரசின் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. தமிழ்நாடு அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதிலிருந்து விலகியதுபோல் எதிர்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தவறான செய்திகளை கூறி வருகிறார்.

தமிழக அரசு 2016ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை அமல்படுத்த முடிவு செய்து, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை 01.11.2016 முதல் அமல்படுத்தி வருகிறது. மத்திய அரசின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தினை வலியுறுத்தியபோதிலும், எந்தவிதமான சமாதானத்தையும் ஏற்றுக்கொள்ளாமல், அம்மா அவர்களின் அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல் செயல்படுத்துவதை முதன்மை நோக்கமாக கொண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்கள்தான் கடைசியாக 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்துடன் இணைந்துள்ளன. 07.10.2016 நாளிட்ட மத்திய அரசுக் கடிதத்தில்

தெரிவித்துள்ள மத்திய அரசின் முடிவின்படி, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தாமல் இருந்திருந்தால், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வந்த மானிய விலை அரிசியினை பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கக்கூடும். எனவே 27.10.2016 அன்று, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் தன்மை மாறாமல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை அமல்படுத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் பயனாளிகள் ஏற்கனவே பெற்று வந்த அளவிலான அரிசி அல்லது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயனாளிகள் பெற தகுதியுள்ள அரிசியின் அளவு இவற்றில் எது அதிகமோ அந்த அளவிலான அரிசியினை வழங்க முடிவெடுக்கப்பட்டது. உதாரணமாக, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசி என நிர்ணயித்துள்ளபோதிலும், ஒரு நபர் மட்டுமே உள்ள குடும்ப அட்டைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த மாதம் ஒன்றுக்கு 12 கிலோ அரிசி என்ற அளவிலேயே தற்போதும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒரு குடும்ப அட்டைக்கு அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசி என்ற வரையறை கைவிடப்பட்டுள்ளது. 10 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் தற்போது மாதம் ஒன்றுக்கு 50 கிலோ அரிசியினை பெறும் தகுதி பெற்றுள்ளது. இவ்வாறு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதாலும் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, நிர்ணயம் செய்யப்பட்ட அளவினைவிட அதிகமான அளவில் அரிசியினை வழங்குவதாலும் ஏற்படும் நிதிச்சுமையினை ஏற்கவும் தமிழ்நாடு அரசு உறுதி கொண்டுள்ளது. எனவே 01.11.2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை அமல்படுத்தியபோது பயனாளிகள் அவர்கள்தம் பெறத்தகுதியுள்ள அரிசியின் அளவினை குறைப்பதற்கு மாறாக, அவர்கள் பெறத் தகுதியான அரிசியின் அளவினை தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 32ன்படி மாநில அரசின் செலவில், பயனாளிகள் பெறத்

தகுதியுள்ள அரிசியின் அளவினை அதிகரிக்கவோ அல்லது பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களை கண்டறிவது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை அமல்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட முக்கிய விதிமுறைகளில் ஒன்றாகும். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 10, மாநில அரசு நிர்ணயிக்கும் விதிமுறைகளின்படி, முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்கள் கண்டறிய வழிவகை செய்கிறது. எனவே தேவைப்படுகின்ற அனைத்து குடும்பங்களையும் முன்னுரிமை பட்டியலில் கொண்டுவரும் நோக்கத்தில், முன்னுரிமை குடும்பங்களை கண்டறிவதற்கான விதிமுறைகளை 27.10.2016 அன்று மாநில அரசு தெரிவித்துள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின் அடிப்படையில் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களை வகைப்படுத்த 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கணக்கீட்டின்படி தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்களில் 62.55 சதவிகித மக்களும், நகர்புறங்களில் வசிப்பவர்களில் 37.79 சதவிகித மக்களும் மட்டுமே தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பயன்பெற தகுதி படைத்தவர்கள். இந்த நிலையில் 18.60 இலட்சம் அந்தியோதயா அன்ன யோஜனா பயனாளிகள் உள்ளிட்ட 98 இலட்சம் முன்னுரிமை குடும்பங்கள் ஏற்கனவே கண்டறியப்பட்டு, முன்னுரிமை குடும்பங்களின் பட்டியல் www.tnpds.gov.in என்ற வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. முன்னுரிமையற்ற குடும்பங்களின் பட்டியலும் மேற்கூறிய வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியல்கள் அனைத்தும் 26.01.2017 அன்று கிராமசபையின் முன் வைக்கப்பட்டுள்ளன. புதிய விவரங்கள் மற்றும் சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு மேற்கூறிய பட்டியல்களும், பயனாளகளின் வகைபாடும் அவ்வப்போது மாறுதலுக்குரியது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. மின்னணு குடும்ப அட்டைகளிலும், குடும்ப அட்டைதாரர்களின் முன்னுரிமை குறித்த வகைபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களை கண்டறிவது

அத்தியாவசியமான ஒன்றாகும். இம்மாநிலத்திலுள்ள குடும்பங்கள், முன்னுரிமை பெற்ற குடும்பங்கள் அல்லது முன்னுரிமையற்ற குடும்பங்கள் என வகைப்படுத்தப்பட்டாலும், அத்தியாவசியப் பொருட்கள் பெறும் தகுதியைப் பொறுத்தவரை எவ்வித வேறுபாடும் கடைபிடிக்கப்படவில்லை. எனவே, முன்னுரிமை குடும்ப அட்டைகள், முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் அனைத்திற்கும் அத்தியாவசியப் பொருட்கள் வழக்கம்போல் தொடர்ந்து வழங்கப்படும்.

2016–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட விதிமுறைகளை வலியுறுத்தியே மீண்டும் 05.07.2017 அன்று தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் சட்டப்பிரிவு 40ன்படி, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தினை செயல்படுவதற்கு ஏதுவாக, மாநில அரசு விதிகளை உருவாக்குவது கட்டாயமான ஒன்றாகும். எனவே, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கிணங்க தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மாநில உணவு ஆணையம் அமைத்தல், அனைத்து நிலைகளிலும் விழிப்பு குழுக்கள் அமைத்தல், மாவட்ட அளவில் நுகர்வோர் குறைதீர் அலுவலர் நியமித்தல் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் வழிவகை செய்கிறது.

எனவே தமிழகத்தில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதில் எவ்வித மாற்றமுமில்லை. ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள 1.96 கோடி குடும்ப அட்டைகள் அனைத்தும் தொடர்ந்து செயல்பாட்டிலேயே உள்ளன. இதுவரை 1.20 கோடி மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. 20 இலட்சம் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கும், குடும்ப அட்டைதாரர்களின் புகைப்படம் பெறுதல் மற்றும் தமிழில் குடும்ப அட்டைதாரர்களின் விவரங்களை சரிபார்த்தல் ஆகிய பணிகள் முடிந்தவுடன் விரைவில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்நோக்கத்தோடு தவறான செய்திகளை வெளியிடுபவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**